**செய்தி வெளியீடு எண்: 116** **நாள்: 13.02.2019**

**சென்னை ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற சுவாமி விவேகானந்தர் சிலை திறப்பு விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் ஆற்றிய உரை – 13.2.2019**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்கி,**

**சுவாமி விவேகானந்தர் அவர்களுடைய திருவுருவச் சிலை திறப்பு விழாவில் கலந்து கொள்வதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.**

இந்த விழாவை சீரோடும், சிறப்போடும் தலைமையேற்று நடத்திக் கொண்டிருக்கின்ற
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களே!

மாண்புமிகு சட்டப்பேரவை தலைவர் அவர்களே!

மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களே!

வருகை தந்திருக்கின்ற மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
மரியாதைக்குரிய அரசு தலைமைச் செயலாளர் அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
மரியாதைக்குரிய நல்லி குப்புசாமி செட்டியார் அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
பாரதிய வித்யா பவனின் தலைவர் அவர்களே!
ஸ்ரீ ராமகிருஷ்ணா மடத்தினுடைய துணைத்தலைவர் அவர்களே!
இந்த நிகழ்ச்சியிலே பங்குபெற்றிருக்கின்ற
டெல்லி சிறப்பு பிரதிநிதி அவர்களே!
வருகை தந்திருக்கின்ற
பாரதிய ஜனதா கட்சியினுடைய மாநிலத் தலைவர் அவர்களே!
நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்களே!
அரசு உயர் அதிகாரிகளே!
பெரியோர்களே! தாய்மார்களே! மாணவர்களே!
ராமகிருஷ்ணா மடத்தினுடைய அங்கத்தினர்களே!
ஊடக நண்பர்களே! பத்திரிகை நண்பர்களே!
இந்த நிகழ்ச்சி சீரோடும், சிறப்போடும் நடைபெறுவதற்கு
மாண்புமிகு ஆளுநருக்கு துணையாக நின்றிருக்கின்ற
ஆளுநருடைய தலைமை கூடுதல் செயலாளர் அவர்களே!
அனைவருக்கும் பணிவான வணக்கத்தை

இந்த நேரத்தில் தெரிவித்து,

**கிராமத்தின் நன்மைக்காக குடும்பத்தை விட வேண்டும்**
**நாட்டின் நன்மைக்காக கிராமத்தை விட வேண்டும்**
**மனித குலத்தின் நன்மைக்காக நாட்டை விட வேண்டும்**
**உலக நன்மைக்காக எல்லாவற்றையும் விடவேண்டும்**

இளமைக் காலத்தில் சுவாமி விவேகானந்தர் படித்த இப்பாடத்தை செயல்படுத்தும் விதமாக, உலக நன்மைக்காக எல்லாவற்றையும் விட்டு துறவியானார் என்பது அனைவரும் அறிந்த உண்மையாகும்.

தியாக மனப்பான்மையே துறவின் அடிப்படை அஸ்திவாரம். தியாக மனப்பான்மை இருந்தால்தான், பிறருக்கு தொண்டாற்ற முடியும். துறவிக்குரிய இக்குணத்தை இயற்கையாகவே பெற்றவர் சுவாமி விவேகானந்தர் அவர்கள்.

சுவாமி விவேகானந்தர் அவர்கள் இளைஞனாக இருந்தபோது பல ஆன்மீக சொற்பொழிவுகளை கேட்டார். அச்சொற்பொழிவுகளின் முடிவில் சொற்பொழிவு ஆற்றியவர்களிடம், “நீங்கள் கடவுளை கண்டதுண்டா?”, என்று கேட்பார். யாரும் உரிய பதிலைக் கூறவில்லை. “ஆம், கண்டிருக்கிறேன்” என்றும், “கடவுளைக் காணும் வழியில் உன்னையும் அழைத்துச் செல்வேன்”, என்றும் கூறி, சுவாமி விவேகானந்தர் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை உண்டாக்கியவர் பகவான் ராமகிருஷ்ண பரமஹம்சர் அவர்கள்தான்.

செப்டம்பர் மாதம் 11ஆம் நாள் 1893–ஆம் ஆண்டு, சிகாகோ நகரில் நடைபெற்ற உலக சர்வ சமய மாநாட்டில், “அமெரிக்க சகோதர, சகோதரிகளே’’ என்று ஆரம்பித்து அவர் நிகழ்த்திய உரை, உலகையே அவர் பக்கம் திரும்ப வைத்தது.

சுவாமி விவேகானந்தர் அம்மாநாட்டில் பேசுகையில், ‘‘பிற சமயக் கொள்கைகளை வெறுக்காமல் மதித்தல், அவற்றை எதிர்ப்பின்றி ஏற்றுக் கொள்ளுதல் ஆகிய இரு பண்புகளை உலகத்திற்கே புகட்டிய நாட்டைச் சேர்ந்தவன் என்பதில் நான் பெருமை அடைகிறேன். எதையும் வெறுக்காமல் மதிக்க வேண்டும் என்ற கொள்கையை நம்புவதோடு, எல்லா மதங்களும்

உண்மை என்று ஒப்புக் கொள்ளவும் செய்கிறோம்'', என்று நமது நாட்டின் சமய சார்பற்ற கொள்கையை அன்றே எடுத்துரைத்தவர் சுவாமி விவேகானந்தர் அவர்கள்தான்.

மேலும் அவர் பேசுகையில், "இதுவரை நடந்துள்ள மாநாடுகளில் மிகச் சிறந்ததாகக் கருதக் கூடிய இந்த மாநாடு, பகவத் கீதையில் உபதேசிக்கப்பட்டுள்ள ''யார் எந்த வழியாக என்னிடம் வர முயன்றாலும் நான் அவர்களை அடைகிறேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு வழியில் என்னை அடைய முயல்கிறார்கள். இறுதியில் என்னையே அடைகின்றனர் என்ற உண்மையை உலகத்திற்கே இந்த மாநாடு பிரகடனம் செய்துள்ளது", எனக் குறிப்பிட்டு பேசினார். இந்த உரை உலகையே நம் நாட்டை நோக்கி திரும்பி பார்க்க வைத்தது.

சுவாமி விவேகானந்தரை உலகிற்கு அடையாளம் காட்டிய சிகாகோ மாநாட்டில், அவர் பங்கேற்க உதவியது தமிழ்நாடு என்று சொல்வதில் நான் பெருமை கொள்கிறேன். உலக சர்வ சமய மாநாட்டில் கலந்து கொள்ள தனக்கு வந்த அழைப்பிதழை சுவாமி விவேகானந்தரிடம் கொடுத்து அவரை பங்கேற்கச் செய்தவர், ராமநாதபுரம் சமஸ்தான மன்னர் திரு. பாஸ்கர சேதுபதி அவர்கள்தான்.

உலக அரங்கில் இந்து மதத்தின் புகழை தன் சொற்பொழிவால் நிலை நிறுத்திய விவேகானந்தர், அமெரிக்கப் பயணத்தை முடித்து விட்டு இலங்கை மார்கமாக 26.1.1897 அன்று பாம்பன் குந்துக்கல் பகுதியில் வந்து இறங்கினார். பாம்பனில் மிகச் சிறப்பான வரவேற்பை அளித்தார் ராமநாதபுரம் சமஸ்தான மன்னர் திரு. பாஸ்கர சேதுபதி அவர்கள். விவேகானந்தரின் பாதம் இந்திய மண்ணில் படுவதற்கு முன் தனது தலையில் பட வேண்டும் என்று முழங்காலிட்டு அமர்ந்த சேதுபதி மன்னரின் செயலை மறுத்து, அவரை ஆறத் தழுவிக் கொண்டார். அந்த வரவேற்பில் பேசிய சுவாமி விவேகானந்தர் அவர்கள், "இது வரை வெளியுலகு அறியாத ஒரு சாதாரண துறவியாக இருந்த என்னை, உலகறிந்த ஞானியாக மாற்றியவர் திரு. பாஸ்கர சேதுபதி", என்று அவரைப் பாராட்டி மகிழ்ந்தார்கள். பாம்பன் பகுதிக்கு சுவாமி விவேகானந்தர் வந்து

இறங்கிய நாளான 26.1.1897ஐ நினைவு கூரும் வகையில், அவர் வந்திறங்கிய இடத்தில் விவேகானந்தர் இல்லம் அமைக்கப்பட்டது. ஆண்டுதோறும் இந்த நாளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

1898ல் கல்கத்தாவில் கொடிய பிளேக் நோய் பரவி ஆயிரக்கணக்கானோரின் உயிரைப் பறித்தது. இதற்கு பயந்து பலர் கூட்டம் கூட்டமாக நகரை விட்டு வெளியேறினர். விவேகானந்தர் அவர்கள் உடனடியாக நிவாரணப் பணிகளை ஆரம்பித்தார். தாமே சென்று பிளேக் பாதித்த பகுதிகளில் தங்கி நிவாரணப் பணிகளை செய்தார்கள். அப்பொழுது அவரது அமைப்பைச் சேர்ந்த சீடர்கள், இந்த பணிகளை செய்து வந்த ராமகிருஷ்ணா மிஷனின் நிதி நிலைமையை பற்றி கேள்வி எழுப்பினார்கள். அதற்கு சுவாமி விவேகானந்தர் அவர்கள், "ஏன் மடத்திற்காக வாங்கியுள்ள நிலத்தை விற்போம். நாம் துறவிகள். பிச்சை உணவை ஏற்று மரத்தடியில் வாழ்வதற்கு தயாராக இருக்கவேண்டும். நம் கண்முன்னால் பரிதவிக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களின் துயர் துடைப்பதற்காக இந்த மடத்தையும் மற்ற உடமைகளையும் விற்பது ஒரு பெரிய விஷயமா என்ன?" என்று திடமாகக் கூறினார்கள்.

இதிலிருந்து சுவாமி விவோகனந்தர் அவர்களும், அவர்கள் ஆரம்பித்த ராமகிருஷ்ணா மிஷன் அமைப்பும் மக்கள் நலனையே முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது என்பது தெரிகிறது.

''தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்ந்தவர் சுவாமி விவேகானந்தர். சுவாமி விவேகானந்தர் மற்றும் அவரது குரு ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்சரின் கொள்கையின்பால் எனக்கு சிறு வயது முதலே மிகுந்த ஈடுபாடு உண்டு. என்னுடைய இல்லத்தில் உள்ள நூலகத்தில் அவர்களது புத்தகங்கள் நிறைய உள்ளன. அவற்றை நான் அடிக்கடி படிப்பது உண்டு", என்றார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மேலும் அம்மா அவர்கள், சுவாமி விவேகானந்தர் பண்பாட்டு மையத்திற்கு தமிழ்நாடு அரசின் சார்பில் 2 கோடி ரூபாய் நிதி உதவி வழங்கினார்கள்.

- **“செயல் நன்று, சிந்தித்து செயலாற்றுவதே நன்று; உனது மனதை உயர்ந்த லட்சியங்களாலும், சிந்தனைகளாலும் நிரப்பு. அவற்றை ஒவ்வொரு நாளின் பகலிலும், இரவிலும் உன் முன் நிறுத்து, அதிலிருந்து நற்செயல் விளையும்’’.**

- **“நீ எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய். உன்னை வலிமை உடையவன் என்று நினைத்தால், வலிமை படைத்தவன் ஆவாய்’’**

என்ற சுவாமி விவேகானந்தர் அவர்கள் அருளிய பொன்மொழிகளை,

பொதுமக்கள், குறிப்பாக இளைஞர்கள், நன்கு படித்து, அவர் காட்டிய வழியில் பயணிக்க வேண்டும் என்று அன்புடன் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

இத்தகைய பெருமை மிக்க வீரத் துறவி சுவாமி விவேகானந்தர் அவர்களுடைய திருவுருவச் சிலையை மாண்புமிகு ஆளுநர் அவர்கள், எனக்கு திறப்பதற்கு வாய்ப்பளித்தமைக்கு நான் பெரும் பாக்கியம் அடைந்தேன் என்று கருதுகின்றேன். உலகப் புகழ் பெற்ற, இன்றைக்கு உலகத்திற்கே முன்னோடியாக விளங்கிய சுவாமி விவேகானந்தர் திருவுருவச் சிலையை திறந்து வைக்கின்ற நான் பாக்கியம் படைத்தேன் என்று இந்த நேரத்தில் தெரிவித்து, இந்த நல்ல வாய்ப்பை வழங்கிய மாண்புமிகு ஆளுநர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகின்றேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**